(இ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.52,93,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.30,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 1–9–2015 (செவ்வாய்க்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எம்–2) துறையின் 22–8–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 196–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2015 ஆகஸ்ட் 31]

[1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 115(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

51. 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எம்–2) துறையின் 27–1–2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 115(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

52. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 13–3–2014 ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ/TR/5/2–11–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

53. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 3–6–2014 ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ/மி.வா.வி./7–35–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

54. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு ஆகியவற்றிற்குத் திருத்தங்கள் செய்தது குறித்து முறையே 1–7–2014 ஆம் நாளிட்ட எண்.த.நா.மி.ஒ.ஆ/மிவவி/7–36 மற்றும் 1–7–2014 ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ/ மிபவி/8–19–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

55. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 8–9–2014 ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ./ நு.கு.தீ.ம.&மி.கு./6–10–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

56. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குத் திருத்தம் செய்தது குறித்து *11–9–2014* ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ./மி.ப.வி/8–20–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

57. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குத் திருத்தங்கள் செய்தது குறித்து *7–10–2014* ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.ப.வி/8–21–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

58. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்குத் திருத்தம் செய்தது குறித்து *23–1–2015* ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ./மி.ப.வி/8–22–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

59. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்குத் திருத்தம் செய்தது குறித்து *22–4–2015* ஆம் நாளிட்ட எண் த.நா.மி.ஒ.ஆ./வ.வி/7–38–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

189. மானியக் கோரிக்கை எண் *45*–சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2015–2016. (தமிழ், ஆங்கிலம்)*

190. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், *2015–2016. (தமிழ், ஆங்கிலம்)*